**<u>சுருக்கம்</u>**

தொடக்கக் கல்வி – 2009 – 2010ஆம் கல்வி ஆண்டில் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் தொடக்கப் பள்ளியிலிருந்து நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்ட 831 பள்ளிகளில் உள்ள தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களை நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**<u>பள்ளிக் கல்வித் (சி.2) துறை</u>**

**<u>அரசாணை (நிலை) எண்.197</u>** **<u>நாள் 07.12.2011</u>**

திருவள்ளுவர் ஆண்டு 2042
கார்த்திகை 21

படிக்கப்பட்டவை:

1. அரசாணை(நிலை) எண்.208, பள்ளிக்கல்வி (சி2) துறை, நாள் 12.08.2009.
2. அரசாணை(நிலை) எண்.216, பள்ளிக்கல்வி (சி2) துறை, நாள் 21.08.2009.
3. அரசாணை(நிலை) எண்.161, பள்ளிக்கல்வி (சி2) துறை, நாள் 16.06.2010.
4. தொடக்கக்கல்வி இயக்குநரின் ந.க.எண்.014427/கே4/ 2011, நாள் 18.05.2011.

-----

**<u>ஆணை:–</u>**

தமிழ்நாட்டில் அனைவருக்கும் கல்வி எனும் மைய அரசின் திட்டத்தின்கீழ் 2001–2002 ஆம் கல்வியாண்டு முதல் தேவை மற்றும் தகுதியின் பேரில் தொடக்கப்பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டு வருகின்றன எனவும், அவ்விதம், தரம் உயர்த்தப்படும் நடுநிலைப்பள்ளிகளுக்கு அக்கல்வியாண்டில் 6ஆம் வகுப்புக்கு ஒரு பட்டதாரி ஆசிரியர் பணியிடம் வீதமும், தொடர்ந்து வரும் கல்வியாண்டில் 7 மற்றும் 8ஆம் வகுப்புக்கு முறையே ஒரு பட்டதாரி ஆசிரியர் பணியிடம் வீதமும் பணியிடங்கள் தோற்றுவித்தும் மற்றும் 8ஆம் வகுப்பு துவக்கப்படுகின்ற 3வது கல்வியாண்டில் அப்பள்ளிகள் 6,7,8 ஆகிய வகுப்புகளுடன் முழுமை பெற்ற நடுநிலைப் பள்ளிகளாக இயங்குவதால் அப்பள்ளிகளுக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டிருந்த தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களை நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களாக நிலையுயர்த்தியும் அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டு வருகின்றன என தொடக்கக்கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மேலும், அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் 2008–2009 ஆம் கல்வியாண்டில் நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்ட 1005 பள்ளிகளுக்கு மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தலைமையாசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

3. மேலே ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்டஅரசாணையில் 2009–2010 ஆம் கல்வியாண்டில் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்ட 831 நடுநிலைப் பள்ளிகளுக்கு, 2011–2012ஆம் கல்வியாண்டில் 6,7,8 வகுப்புகளுடன் முழுமை பெற்ற நடுநிலைப்பள்ளிகளாக இயங்குவதால், பள்ளிகளின் நிர்வாகத்துக்குத் தலைமையாசிரியர் பணியிடங்கள் இன்றியமையாதவை ஆகும். எனவே, 831 நடுநிலைப் பள்ளிகளில் ஏற்கனவே ரூ.9300–34800+4500 தர ஊதியம் என்கிற ஊதிய விகிதத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களை ரூ.9300–34800+ 4700 தர ஊதியம் என்கிற ஊதிய விகிதத்திலுள்ள நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களாக 2011–2012 ஆம் கல்வியாண்டுக்கு நிலையுயர்த்தி ஆணை வழங்குமாறும், மேலும், 2009–2010 ஆம் கல்வியாண்டில் 831 தலைமையாசிரியர் பணியிடங்களுள் 6 பள்ளிகள் அரசு பழங்குடியினர் உண்டு, உறைவிடப் பள்ளிகளும், 2 பள்ளிகள் ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளும் இடம்பெற்றுள்ளன. இந்த 8 நடுநிலைப் பள்ளிகளுக்கான செலவினம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் மேற்கொள்ளப்படும் என்றும், தொடக்கக்கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும், தொடக்கக்கல்வித் துறை சார்ந்த (831–8) 823 நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களை ரூ.9300–34800+4500 தர ஊதியம் என்கிற ஊதிய விகிதத்திலுள்ள தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களிலிருந்தும், ரூ.9300–34800+4600 தர ஊதியம் என்கிற ஊதிய விகிதத்திலுள்ள பட்டதாரி ஆசிரியர்/ தமிழாசிரியர் ஆகிய ஊட்டுப் பணியிடங்களிலிருந்தும் முன்னுரிமை பட்டியலின்படி பதவி உயர்வு வாயிலாக நிரப்பிக் கொள்ள அனுமதியளிக்குமாறும் தொடக்கக்கல்வி இயக்குநர் கோரியுள்ளார். இவ்வாறு பதவி உயர்வு வாயிலாக 823 தொடக்கக் கல்வி துறை சார்ந்த நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களை நிரப்பும்போது ஆண்டொன்றுக்கு ரூ.119.00 லட்சம் தோராயமாக அரசுக்கு கூடுதல் செலவினம் ஏற்படும் என்றும் தொடக்கக்கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணைகள் வெளியிடப்படுகிறது.

I. 2009–2010ம் கல்வியாண்டில் நிலை உயர்த்தப்பட்ட 831 தொடக்கப்பள்ளிகள் 2011–2012ம் கல்வியாண்டில் முழுமை பெற்ற நடுநிலைப் பள்ளிகளாக இயங்குவதால், அப்பள்ளிகளின் நிர்வாக நலன் கருதி ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களை நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்தப்படுகிறது.

II. மேலே குறிப்பிட்டுள்ள பள்ளிகளுள் ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் சார்ந்த 8 உண்டு, உறைவிட பள்ளிகளில் தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களை நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்துவதால் ஏற்படும் கூடுதல் செலவினம் ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

III. நிலையுயர்த்தப்படும் நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களை, தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் , பட்டதாரி ஆசிரியர் மற்றும் தமிழாசிரியர் ஆகியோரைக் கொண்டு பணி மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு மூலம் நிரப்பிட தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

5. மேலே குறிப்பட்டவாறு தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடங்களை நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்துவதால் ஏற்படும் கூடுதல் செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புக்களின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:

<u>ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகள்</u>

2202 – பொதுக்கல்வி – 01 – தொடக்கக் கல்வி –101- அரசு தொடக்கப் பள்ளிகள் –1 திட்டத்தில் சேராதது – AC – ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள் – 01 – சம்பளங்கள்
ததொகு. 2202 – 01 – 101 – AC – 0101)

<u>அரசுப் பள்ளிகள்</u>

2202 – பொதுக்கல்வி – 01 தொடக்கக் கல்வி – 101 – அரசு தொடக்கப் பள்ளிகள் –1 திட்டத்தில் சேராதது – AB அரசு தொடக்கப் பள்ளிகள் – 01 –சம்பளங்கள்
(ததொகு. 2202– 01 –101 –AB – 0103)

<u>நகராட்சி/மாநகராட்சிப் பள்ளிகள்</u>

“2202 பொதுக்கல்வி – 01 தொடக்கக் கல்வி – 101 அரசு தொடக்கப் பள்ளிகள் –1 திட்டத்தில் சேராதது – AA நகராட்சி, மாநகராட்சி தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள் – 01 சம்பளங்கள்
(ததொகு. 2202 01 101 AA 0105) “

6. மேலே நிலை உயர்த்தப்பட்டுள்ள பணியிடங்களின் சம்பளம் குறித்த செலவிற்கான கூடுதல் நிதி 2011–2012ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அவ்வாறு கூடுதல் நிதியொதுக்கம் செய்யப்படும் வரை செலவினை மேற்கொள்ள, தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

7. 2011–2012ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்க கருத்துருவில் மேலே குறிப்பிட்டுள்ள கூடுதல் செலவினை சேர்த்து நிதித் துறைக்கு அனுப்புமாறு, தொடக்கக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

8. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 60167/CMPC/2011, நாள் 16.11.2011–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 880(எண்ணூற்று எண்பது)

(ஆளுநரின் ஆணைப்படி)

த.ஸ்ரீ.ஸ்ரீதர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்ககம்,
சென்னை–6.
ஆணையர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்,
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–18/35.
<u>நகல்:–</u>
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9.
நிதித்(கல்வி/வரவு செலவு (பொது–I மற்றும் II /சிஎம்பிசி)துறை, சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
பள்ளிக் கல்வி(பட்ஜெட்)துறை, சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்